## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 249/2014

## Witness PW 1

பெயர் தனலட்சுமி க/பெ மூர்த்தி

இன்று (21.09.2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் தாக்கல் செய்துள்ள பாக வழக்கு அங்கப்பன் என்பவர் பெயரில் உள்ள சொத்துக்கள் மீது தான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . எனது தந்தையாரின் தனிப்பட்ட சொத்தை இந்த வழக்கில்சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கூட்டு குடும்ப சொத்தான தாவா 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் எனது தந்தைக்கு தனி உரிமை இல்லாத நிலையில் என் பெயரில் 13.01.2014 ல் ஏற்படுத்திய உயில் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. உயில் எழுதுவதற்கு வாசகங்கள் யார் சொன்னது என்றால் எனது தந்தையார் தான் சொன்னார் . எனது தந்தையாருக்கு நான் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான் உடன் பிறந்த வேறு யாரும் இல்லை என்றால் சரிதான் . எந்த காரணத்திற்காக 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை உயிலாக எழுதி வைத்தார் என்றால் எனது தந்தையாருக்கு உடம்பு சரியில்லை எனது அப்பாவுக்கு பாகம் பிரியவில்லை அதனால் உயில் எழுதி வைத்தார் . கூட்டு குடும்ப சொததில் தனி ஒருவர் உயில் எழுத சட்டப்படி இயலாது அதனால் எனது தந்தையார் எனது பெயரில் எழுதி வைத்த உயில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 6 முதல் 9 பிரதிவாதிகள் எனக்கு பெரியப்பா மகள்கள் என்பதால் சகோதரி உறவுமுறை என்றால் சரிதான் . கூட்டு குடும்ப சொத்துக்கள் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு அங்கப்பனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் பாக உரிமை உள்ளது என்றால் சரிதான் . 6 முதல் 9 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்று எனது வழக்கறிஞரை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 6 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்தில்

அங்கப்பபனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் அவர்களுக்குரிய பாக உரிமை கேட்டு அதற்குரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி சொத்தை அவர்களுக்கு ஒதுக்க கேட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram

<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>

<u>O.S. No. 249/2014</u>

<u>**Witness PW 2**</u>

பெயர் தயாநிதி த/பெ தனபால்

இன்று (21.09.2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

<u>**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

<u>**சத்தியமாக சொல்கிறேன்**</u>

முத்துசாமி என்பவர் எனது தாத்தா என்றால் சரிதான். முத்து சாமி என்பவருக்கு அங்கப்பன், நாராயணன், தனபால் ஆகியோர்கள் மகன்கள் என்றால்ச ரிதான் . அங்கப்பன் வாரிசுகள் தான் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 2 ம் பாக்கியவதி என்றால் சரிதான். பாக்கியவதி என்பவரின் வாரிசுள் தான் 6 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சிரதான் . நாராயணன் என்பவரின் வாரிசுகள் தான் 2 ம் வாதி தனலட்சுமி என்றால் சரிதான் . எனது தகப்பனார் பெயர் தனபால் என்றால் சரிதான். 3 முதல் 5 பிரதிவாதிகள் எனது தங்கைகள் என்றால் சரிதான். அங்கப்பன் பெயரில் உள்ள சொத்துக்களை மட்டும் தான் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அங்கப்பன் என்பவர் 01.11.1991 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான் . 2 ம் வாதி தகப்பனார் நாராயணன் எப்போது இறந்தார் என்றால் 30.03.2014 அன்று இறந்தார். எனது தகப்பனார் எப்போது இறந்துபோனார் என்றால் 06.11.2011 ல் இறந்தார். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் . வழக்கு தாக்கல் செய்யும்போது அங்கப்பனின் வாரிசுகளாக 1, 2 பிரதிவாதிகளை மட்டுமே சேர்த்திருந்தேன் என்றால் சரிதான். அங்கப்பனின் வாரிசு பாக்கியவதி என்பவர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு நடப்பது தெரிந்து பாக்கியவதியின் வாரிசுகள் 6 முதல் 9 பிரததிவாதிகளாக வழக்கில் சேர்க்க மனு செய்யப்பட்டு சேர்த்தார்கள் என்றால் சரிதான் . தாவா சொத்துக்களின் கூட்டு குடும்ப சொத்து என்ற அடிப்படையில் எங்களுக்கு பாகம் உள்ளது போலவே பாக்கியவதியின் வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாக உரிமை உள்ளது என்றால் சரிதான் . 01.04.2009 எனது தகப்பனார் 3 முதல் 5 பிரதிவாதிகளை நீக்கிவிட்டு என் பெயரில் மட்டும் உயில் எழுதினார் என்றால் சரிதான் . உயிலில் உள்ள சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் கூட்டு குடும்ப சொத்துக்களும் உள்ளது எனது தந்தையாரின் தனிப்பட்ட சொத்துக்களும் உள்ளது . தனிப்பட்ட சொத்து எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் 4 ஏக்கர் உள்ளது. வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் உயிலில் எழுதப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான் . கூட்டுக்குடும்ப

சொத்துக்களின் எனது தந்தையாருக்கு பாகம் பிரியாத நிலையில் உயில் எழுதியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல . எனது தகப்பனார் இறக்கும் வரையில் எனது சகோதரிகள் எனது தகப்பனாருடன் நல்ல உறவு நிலையில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது தந்தையார் மற்ற வாரிசுகள் உள்ள நிலையில் எனக்குக மட்டும் உயில் எழுதி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட வேண்டிய அவசியமில்லை அந்த உயில் என்னால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல . அங்கப்பன் அவரது வாரிசுகளுக்கு எந்த விதமான உயில் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான் . 6 முதல் 9 பிரதிவாதிகளின் தாயார் பாக்கியவதி எனக்கு என்ன உறவு முறை என்றால் பெரியப்பா மகள் என்பதால் எனக்கு தங்கை உறவுமுறை . 6 முதல் 9 பிரதிவாதிகள் அவர்களுக்கும் பாகம் வேண்டுமென்று நீதிமன்ற கட்டணம் செலுத்தி கேட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அங்கப்பனின் வாரிசுகள் என்ற முறையில் பாக்கியவதிக்கு சொத்தில் பாத்தியதை உண்டு அதனால் அவரது வாரிசுள் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். 6 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்தில் பங்கு உரிமையர்கள் என்றால் சரிதான்.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram